2014 ஜூலை 31]

மிகப்பெரிய வரவேற்பைப் பெற்று, அந்த மக்களுக்கு மகத்தான சேவையை இத்திட்டத்தின்மூலம் வழங்கி வருகிறது. அதேபோல் மலைப் பகுதிகளில் பெரிய பேருந்துகள் செல்லுகின்றபோது, மலைப் பகுதிகளில் குறுகிய பகுதிகளில் பேருந்து சென்று திரும்பமுடியாத சூழ்நிலையைக் கருத்தில்கொண்டு, மலைப் பகுதிகளுக்குச் செல்லக்கூடிய அந்தப் பெரிய பேருந்துகளை மாற்றி, சிறிய பேருந்துகளை, சிற்றுந்துகளை இயக்குவதற்கு முதல்முறையாக மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். அதன் அடிப்படையில், விழுப்புரம் கோட்டத்தில் ஏழு பேருந்துகளை மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தங்களுடைய திருக்கரங்களால் கொடி அசைத்து, மக்களுடைய பயன்பாட்டுக்கு வழங்கியிருக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மலைப் பகுதிகளுக்கு மட்டும் 250 சிற்றுந்துப் பேருந்துகளைக் இயக்குவதற்கு உத்தரவிட்டிருக்கிறார்கள். அந்தப் பேருந்துகளுக்குக் கூண்டு கட்டும் பணிகள் நடைபெற்று வருகின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 292, மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. முத்துராமலிங்கம், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

292—

தரம் உயர்த்துதல்

***43711—திரு. ம. முத்துராமலிங்கம்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருமங்கலம் தொகுதி, திருமங்கலம் ஊராட்சி ஒன்றியம், அலப்பலச்சேரியிலுள்ள கால்நடைக் கிளை நிலையத்தினைக் கால்நடை மருத்துவமனையாகத் தரம் உயர்த்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் திருமங்கலம் தொகுதி, திருமங்கலம் ஊராட்சி ஒன்றியம், அலப்பலச்சேரியிலுள்ள கால்நடைக் கிளை நிலையத்தினை கால்நடை மருத்துவமனையாகத் தரம் உயர்த்தித் தரக் கேட்டிருக்கிறார்கள். அந்த அலப்பலச்சேரி கிராமத்தைச் சுற்றி 5,000-க்கும் அதிகமான கால்நடை அலகுகள் உள்ளன. இவை துறையின் விதிகளுக்குட்பட்டிருப்பதால், அங்கே இயங்கி வரும் கால்நடைக் கிளை நிலையத்தை மருத்துவமனையாகத் தரம் உயர்த்தித் தர மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தங்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. முத்துராமலிங்கம் அவர்கள்.*

திரு. ம. முத்துராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்' என்ற அடிப்படையில், மக்களுக்கு நோய் இல்லாத வாழ்க்கையை வழங்குவதற்காக மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 'முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தினை' வழங்கி இன்றைக்கு நோய் இல்லாத நல்வாழ்க்கையை மக்களுக்கு உருவாக்கித் தந்திருக்கிறார்கள். அதேபோல, கால்நடைகளுக்கும் நோய் இல்லாத வாழ்க்கையை உருவாக்கித் தர வேண்டுமென்ற அடிப்படையில், இன்றைக்குக் கால்நடைத் துறை மூலமாகப் பல்வேறு மருத்துவ உபகரணங்கள், மருத்துவ உதவிகள் வழங்கிக் கொண்டிருக்கின்ற இந்த நல்லவேளையிலே திருமங்கலம் தொகுதிக்குட்பட்ட அலப்பலச்சேரியிலுள்ள கால்நடைக் கிளை நிலையத்தை மருந்துவமனையாகத் தரம் உயர்த்தித் தரப்படும் என்று தெரிவித்த மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். திருமங்கலம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கள்ளிக்குடி ஒன்றியம், வில்லூரில் உள்ள கிளை நிலையத்தினை மருந்தகமாகத் தரம் உயர்த்தித் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

2014 ஜுலை 31]

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடக்கூடிய அந்தக் கிளை நிலையம் துறையின் விதிகளுக்குட்பட்டு இருக்குமானால் அதை கால்நடை மருந்தகமாகத் தரம் உயர்த்தித் தர மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. முத்துராமலிங்கம் அவர்கள்.

திரு. ம. முத்துராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். கள்ளிக்குடி ஒன்றியத்தில் உள்ள அரசப்பட்டி, தும்பக்குளம், கல்லணை போன்ற பகுதிகளுக்குக் கிளை நிலையங்கள் அமைத்துத் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு கால்நடைக் கிளை நிலையம் அமைக்கவேண்டுமென்று சொன்னால், அங்கே 3,000 கால்நடை அலகுகள் இருக்க வேண்டும். 3 கி.மீ. தூரத்திற்கு எந்தவொரு கால்நடைக் கிளை நிலையமும் இருக்கக் கூடாது என்று அரசு விதி இருக்கின்றது. அந்த விதிகளுக்குட்பட்டு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லுகின்ற அந்தக் கிராமங்கள் இருக்குமானால், அங்கே ஒரு கிளை நிலையம் அமைக்க மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்களின் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி ஆர். சாந்தி அவர்கள்.

திருமதி ஆர். சாந்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது சேந்தமங்கலம் தொகுதிக்குட்பட்ட எருமைப்பட்டி யூனியன், முத்துகாப்பட்டி ஊராட்சியில் ஒரு கால்நடை மருத்துவமனை

அமைக்கப்படவேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் கடிதம் கொடுத்திருக்கின்றேன். முத்துகாப்பட்டி ஊராட்சியில் ஒரு கால்நடை மருத்துவமனை அமைத்துக் கொடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

முற்பகல் 10-50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற அந்த முத்துகாப்பட்டி கிராமத்தினை துறை ஆய்வு செய்து, அரசு விதிகளுக்குட்பட்டிருக்கும் என்று சொன்னால், நிச்சயமாக அங்கே ஒரு கால்நடைக் கிளை நிலையம், மாண்புமிகு அம்மா அவர்களுடைய அனுமதியைப் பெற்று, அமைக்கப்படும் என்பதைத் தங்களின் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 293, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம், மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.*

293—

நூல் கொள்முதல்

***7363—திரு. எம். ஆறுமுகம்:**

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விலையில்லா சீருடை, வேட்டி, சேலை வழங்கும் திட்டங்களுக்குத் தேவையான நூலைக் கூட்டுறவு நூற்பாலைகள் மூலமாகக் கொள்முதல் செய்ய அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா, கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கின்றேன்.